செ.வெ. எண்: 452 நாள்: 31–07–2012

# செய்தி வெளியீடு

தீயின் அழிவிலிருந்து மனித உயிர்களையும், உடைமைகளையும், காக்கும் பணியையும், இயற்கை சீற்றங்கள் மற்றும் இதர பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டும் பணியினையும் தீயணைப்பு மற்றும் மீட்டுப் பணிகள் துறை செய்து வருகிறது. இத்துறையின் செயல்பாடுகள் சிறக்கும் வகையில் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்தவகையில், சென்னையில் நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், சென்னை நகரில் பல்வேறு தொழில் அமைப்புகள் தங்களின் அலுவலகங்களைத் தொடங்குவதால், பல அடுக்குமாடிக் கட்டடங்கள் கொண்ட வணிக வளாகங்கள் பெருகி வருவதையும் கருத்தில் கொண்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை தீயணைப்புத்துறையினர் திறம்பட மேற்கொள்ளும் வகையில், சென்னை நகரின் பயன்பாட்டிற்காக 54 மீட்டர் உயரம் வரை வான் நோக்கி உயரும் நீட்டிப்பு ஏணி கொண்ட ஒரு ஊர்தியினை 5 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பில் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஊர்தி தென்சென்னை கோட்டம், அசோக்நகர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு வழங்கப்படும்.

அரசின் இந்த நடவடிக்கையின் மூலம், மிக உயரமான பல அடுக்குமாடி கட்டடங்களில் தீ விபத்து ஏற்படின் அது உடனடியாக அணைக்கப்பட்டு, பொருட்சேதம் மற்றும் உயிர்சேதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

இதேபோன்று, தீவிபத்து ஏற்படும் இடங்களில் கொழுந்து விட்டு எரியும் தீ பிழம்புகளுக்கு இடையே சென்று தீயை அணைத்து, உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்கும் கடினமான பணியினை மேற்கொள்ளும் தீயணைப்பு வீரர்களின் உயிரினை பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கு கையுறைகளுடன் கூடிய மூன்றடுக்குக் கொண்ட தீ பாதுகாப்பு உடைகள், தீ தடுப்பு மூடு காலணிகள் (gum boots) தீ பாதிக்காத தலைக்கவசம் மற்றும் சுவாசத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடன் கூடிய மூச்சுக் கருவிகளை உள்ளடக்கிய தற்காப்பு உடைகளை 28 கோடி ரூபாய் செலவில் வாங்கி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த தற்காப்பு உடைகள், மாநிலத்திலுள்ள 302 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு, ஒரு நிலையத்திற்கு 6 உடைகள் என்ற வீதத்தில் மொத்தம் 1812 உடைகள், ஒகனேக்கல் மற்றும் கோத்தகிரியில் இயங்கிவரும் மீட்புப் பணி நிலையங்களுக்கு, நிலையம் ஒன்றுக்கு 4 என்ற வகையில் 8 உடைகள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் நிலைய அலுவலர்கள் ஆகியவர்களுக்கு 160 உடைகள் என மொத்தம் 1980 நபர்களுக்கு வழங்கப்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் தீயணைப்போர், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தீயணைப்புத் துறையின் பணிகள் மேலும் சிறக்கவும் வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 31.7.2012